1994 மார்ச் 31]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்.

விதி 30,130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானம். மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவை விதிகள் 30,130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 10-20

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் கோருவார். மாண்புமிகு நிதி அமைச்சர்.